ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

විෂයය අංකය / பாட இலக்கம்: **65** විෂයය / பாடம்: **இரண்டாம்மொழி - தமிழ்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 3 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 2 | 33. | 1 |
| 04. | 1 | 14. | 3 | 24. | 3 | 34. | 4 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 1 | 16. | 1 | 26. | 3 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 4 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 4 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: **25/40**

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25/40**

# கட்டுரை எழுதுதல்

1. பரீட்சார்த்தி எழுதிய விடயங்கள் பின்வரும் அ, ஆ, இ, என்ற மூன்று அம்சத் திட்டத்தின் படி மதிப்பிடப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

   அ. உள்ளடக்கம் பொருத்தம், அளவு
   வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமாக எழுதப்படல், போதியளவு விடயங்கள் இடம்பெறல், சொல்லளவு கருத்திற் கொள்ளப்படல். (08 புள்ளிகள்)

   ஆ. கருத்து வெளிப்பாடும், மொழிச் செம்மையும்
   கருத்துக்களைத் தெளிவாக முன்வைத்தல், எழுத்துக் கூட்டல் மற்றும் இலக்கண வழுக்கள் இன்மை (08 புள்ளிகள்)

   இ. எழுதும் நுட்பங்கள்
   பந்திகள் இடம்பெறல், பந்திகளுக்கிடையே தொடர்பு காணப்படல், குறியீடுகள் பொருத்தமாக இடப்படல், உறுப்பமைவாகவும் நேர்த்தியாகவும் எழுதுதல். (04 புள்ளிகள்)

2. கட்டுரைக்கான மொத்தப் புள்ளிகள்
   அ. 08 புள்ளிகள்
   ஆ. 08 புள்ளிகள்
   இ. 04 புள்ளிகள்
   } 20 புள்ளி

3. கட்டுரைக்குப் புள்ளி வழங்கும் முறை
   எடுத்துக்காட்டு

$$\frac{04}{08}+\frac{04}{08}+\frac{03}{04}=\frac{11}{20}$$

## இரண்டாம் மொழி - தமிழ் II

1. பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவுசெய்து தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கி ஏறத்தாழ **100** சொற்களில் அமையுமாறு கட்டுரை ஒன்று எழுதுக.
දෙන ලද තොරතුරුවලට අනුව පහත මාතෘකාවලින් **එකක්** පිළිබඳ වචන **100** ක පමණ රචනයක් ලියන්න.
Write an essay in about **100** words on any **one** of the following topics according to the given information.

அ. நான் நேரில் பார்த்த வீதி விபத்து
- (i) விபத்து இடம்பெற்ற விதம்
- (ii) சூழவிருந்த மக்கள் செயற்பட்ட விதம்
- (iii) பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகள்
- (iv) விபத்து உணர்த்திய பாடங்கள்

ஆ. எமது ஊர் நூல்நிலையம்
- (i) நூல் நிலையத்தின் அமைவிடம்
- (ii) நூல் நிலையத்திலுள்ள வளங்கள்
- (iii) நூல் நிலையத்தைப் பயன்படுத்தும் விதம்
- (iv) நூல் நிலையத்தினால் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்கள்

இ. பூங்காவின் ஒரு நாள்
- (i) பூங்காவின் பெயர் மற்றும் அமைவிடம்
- (ii) பூங்காவின் அழகிய காட்சிகள்
- (iii) பூங்காவில் பொழுதைக் கழித்த விதம்
- (iv) பூங்காவைத் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதற்கு வழங்கக்கூடிய ஆலோசனைகள்

ஈ. உடற்பயிற்சியின் முக்கியத்துவம்
- (i) உடற்பயிற்சி பற்றிய அறிமுகம்
- (ii) உடற்பயிற்சியின் வகைகளும் அவற்றை மேற்கொள்ளும் விதமும்
- (iii) உடற்பயிற்சியினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள்
- (iv) உடற்பயிற்சியின்மையால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்

உ. பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்.
- (i) பொலித்தீன் பாவனை பற்றிய அறிமுகம்
- (ii) இலங்கையில் பொலித்தீன் பாவனை
- (iii) பொலித்தீன் பாவனையினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்
- (iv) பொலித்தீன் பாவனையைத் தடைசெய்வதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

*(20 புள்ளிகள்)*

1. அ. நான் நேரில் பார்த்த வீதி விபத்து

i. விபத்து இடம்பெற்ற விதம்
- எப்படி
- எங்கே
- எவ்வாறு
- யாருக்கிடையில்

ii. சூழவிருந்த மக்கள் செயற்பட்ட விதம்
- சத்தமிடல்
- ஓடி வரல்
- உதவி செய்தல்
- அம்பியுலன்ஸ் வண்டிக்கு அறிவித்தலும் பொலிசாருக்கு அறிவித்தலும்

iii. பொலிசார் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்
- ஆவத்து இடம்பெற்ற இடத்தை அடையாளத்தல்.
- மக்களை ஓரமாக்குதல்.
- வாகனத்தைப் பரிசீலித்தல்
- விபத்துக்குள்ளானவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தல்.
- பதிவுகளை மேற்கொள்ளல்.

iv. - உயிர் ரீதியான பாதிப்பு ஏற்படல்.
- உள ரீதியான பாதிப்பு ஏற்படல்.
- பொருளாதார பாதிப்பு ஏற்படல்.
- வீதி ஒழுங்கு பேணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தல்.

ஆ. எமது ஊர் நூல் நிலையம்

i. நூல் நிலையத்தின் அமைவிடம்
- ஊரின் மத்தியில் அமைந்துள்ளது.
- பிரதான வீதிக்கு அருகில் உள்ளது.
- வாகனங்களை நிறுத்துவதற்கான வசதி உள்ளது.

ii. நூல் நிலையத்திலுள்ள வளங்கள்
- சிறுவர், முதியோர், புத்தகங்கள் வகைப்படுத்தப்பட்டிருத்தல்.
- தேவையான புத்தகங்கள் உள்ளன (அரசியல், சமூக, சமய, விஞ்ஞான)
- வகைப்படுத்தப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.
- அமர்ந்து வாசிப்பதற்கேற்ப மேசைகளும், கதிரைகளும் உள்ளன.
- முறையாக செயற்படும் ஊழியர்கள் காணப்படல்.
- அன்றாட பத்திரிகைகள், சஞ்சிகைகள் பெற முடிதல்.
- தொலைக்காட்சி, கம்பியூட்டர் காணப்படல்.

iii. நூல் நிலையத்தை பயன்படுத்தும் விதம்
- எப்போதும் அமைதியை பேண வேண்டும்.
- நூல்களை கவனமாக பயன்படுத்த வேண்டும்.
- நூல்களை சேதப்படுத்தக் கூடாது.
- நூல்களை வாசித்த பின் அவற்றிற்குரிய இடத்தில் திரும்பவும் வைக்க வேண்டும்.
- முக்கியமான நூல்களில் குறிப்பெடுக்க முன் ஒப்படைக்க வேண்டும்.

iv. நூல் நிலையத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்கள்
- எமக்குரிய அறிவை வளர்க்கின்றது.
- செலவின்றி அன்றாட விடயங்களை அறிய முடியும்.
- பெறுமதிமிக்க அரிய நூல் வகைகளை வாசிக்க முடியும்.
- சிறந்த பொழுதுபோக்கு
- நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்
- நூல் வாசிப்பின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.
- வழிகாட்டியாக அமையும், சிறந்த அனுபவம் கிடைக்கும்.
- ஆளுமையை வளர்க்கும்.

## இ. பூங்காவில் ஒருநாள்

i. பூங்காவின் பெயர் மற்றும் அமைவிடம்
- பூங்காவின் வகைகள்
- நகரின் மத்தியில் அமைந்திருத்தல்.
- இலகுவாகச் சென்றடையலாம்.
- கவர்ச்சிகரமான இடம், மலைகள், ஆறுகள் சூழ இருத்தல்.

ii. பூங்காவி.ன் அழகிய காட்சிகள்
- வர்ணப் பூக்களோடு கூடிய வளைவு
- பூ மரங்கள் ஒழுங்காக நாட்டப்பட்டிருத்தல்.
- அறிவித்தல் பலகைகள் வழிகாட்டும் விதத்தில் அமைந்திருத்தல்.
- ஒழுங்காகக் கத்தரித்தல்.

iii. பூங்காவில் பொழுதைக் கழித்த விதம்
- பூ மரங்களைப் பார்வையிட்டமை, சுற்றிப் பார்த்தமை.
- சிறுவர் விளையாட்டு நிகழ்ச்சிகள்
- மதிய உணவு உண்டமை.
- புகைப்படம் எடுத்தமை.

iv. பாதுகாப்பதற்கு வழங்கக் கூடிய ஆலோசனைகள்
- பூக்களைப் பிடுங்குதல் கூடாது.
- சுத்தமாக வைத்திருத்தல்.
- உணவுப் பொதிகளை கண்ட இடங்களில் வீசக் கூடாது.
- பார்வையிடும் இலக்கங்களை இடல்.

## ஈ. உடற்பயிற்சியின் முக்கியத்துவம்

i. உடற்பயிற்சி பற்றிய அறிமுகம்
- உடற்பயிற்சி என்றால் என்ன?
- உடற்பயிற்சியின் முக்கியத்துவம்

ii. உடற்பயிற்சியின் வகைகளும் அவற்றை மேற்கொள்ளும் விதமும்
- தனியாகவும், குழு நிலையிலும் உடற்பயிற்சியில் ஈடுபடுதல்.
- இயந்திரங்களை உபயோகித்து மேற்கொள்ளல்.
- பாடல்களை ஒலிக்கச் செய்து நடனமாடுதல் வகையிலான உடற்பயிற்சிகள்
- காலையிலும் மாலையிலும் ஓய்வு நேரங்களிலும் மேற்கொள்ளல்.

iii. உடற்பயிற்சியினால் மேற்கொள்ளக்கூடிய பயன்கள்
- மனித வாழ்வை இலகுபடுத்தும்.
- இரத்த ஓட்டம் சீராகும்.
- பற்பல தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.
- மனித செயற்பாடுகளை உற்சாகப்படுத்தும்.

iv. உடற்பயிற்சியின்மையால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்
- மனித வாழ்வை சீர் குலைக்கும்.
- தொற்றா நோய்கள் அதிகளவில் ஏற்படும்.
- நாளாந்த மனித செயற்பாடுகள் தடைப்படும்.

**உ. பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்**

i. பொலித்தீன் பாவனை பற்றிய அறிமுகம்
- பொலித்தீன் பாவனை அபரிதமாக அதிகரித்துள்ளது.
- அது நவீனம் என்ற நிலையில் காணப்படுதல்.
- கொண்டு செல்வதற்கு இலகு என மக்கள் எண்ணுதல்.

ii. இலங்கையில் பொலித்தீன் பாவனை
- சோடனை செய்தல்.
- கடையில் பொருட்கள் இடுதல், கொடுத்தல்.
- பதாகைகள்
- விளம்பரப் பலகை

iii. பொலித்தீன் பாவனையினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்
- விவசாயம் பாதிப்படைதல்.
- அழகு, கவர்ச்சியற்ற சூழல் (கண்ட இடங்களில் காணப்படல்)
- நோய்கள்
- மிருகங்கள் அதனை உண்ணல் இறத்தல்.

iv. பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்.
- ஆலோசனைகள் விளிப்படையச் செய்தல்.
- சட்ட நடவடிக்கைகள், தண்டம் அறவிடல்.
- உற்பத்தித் தடை

(20 புள்ளிகள்)

**2.** கீழே தரப்பட்ட படத்தை அடிப்படையாகக் கொண்டு **கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து** எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஆகக் குறைந்தது நான்கு** சொற்களேனும் இருத்தல் வேண்டும்.)
පහත දැක්වෙන පින්තූරය පදනම් කර ගනිමින් **අර්ථවත් වාක්‍ය පහක්** ලියන්න. (සෑම වාක්‍යයකම වචන හතරකට නොඅඩුව තිබිය යුතු ය.)
Write **five meaningful sentences** based on the picture given below. (Each sentence should contain **at least four words.**)



*(10 புள்ளிகள்)*

பகுதி **II / II කොටස / Part II**

2. (படம் பார்த்து வசனம் எழுதுதல்)

1. இது ஒரு அழகான வகுப்பறையின் படம்.
2. இப்படத்தில் மூன்று சிறுமிகள் காணப்படுகின்றனர்.
3. இப்படத்தில் மூன்று சிறுவர்கள் காணப்படுகின்றார்கள்.
4. இப்படத்தில் சிறுவர்கள் சிலர் காணப்படுகின்றார்கள்.
5. இப்படத்தில் உள்ள ஒரு சிறுமி கரும்பலகையை அழித்துக் கொண்டிருக்கினார்.
6. இப்படத்தில் உள்ள ஒரு சிறுமி மேசையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கின்றார்.
7. இப்படத்தில் உள்ள ஒரு சிறுவன் சுவரை சுத்தம் செய்கின்றான்.
8. இங்கு சுவரில் ஒரு படம் மாட்டப்பட்டுள்ளது / தொங்கவிடப்பட்டுள்ளது.
9. இது எனக்கு விருப்பமான ஒரு படம் / இது நான் விரும்பும் ஒரு படம்

(இவை போன்ற படத்திற்கு பொருத்தமான வாக்கியங்களைக் கவனித்து.ப் புள்ளியிடுக.)

| | | |
|---|---|---|
| முழுமையான வாக்கியம் | - | 02 புள்ளி |
| வழுக்கள் உள்ள வாக்கியம் | - | 01 புள்ளி |

(2 x 5 = 10 புள்ளிகள்)

- **3, 4** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றுக்கு** மாத்திரம் விடை எழுதுக.
  **3** සහ **4** ප්‍රශ්නවලින් **එකකට** පමණක් පිළිතුරු ලියන්න.
  Answer only **one** question from **3** and **4**.

**3.** பின்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත කවි පෙළ කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
Read the following poem and answer the questions given below in **complete sentences.**

மரங்கள் நாட்டின் வளமாம் மண்ணில் நட்டால் நலமாம்.
கண்ணுக்குக் குளிர்ச்சி தந்திடுமாம் காயும் கனியும் கொடுத்திடுமாம்.
மருந்து செய்ய உதவிடுமாம் மக்கள் நலமும் காத்திடுமாம்.
நீரைத் தேக்கி வைத்திடுமாம் நிலத்தை உறுதியாய்ச் செய்திடுமாம்.

மழையும் மரத்தால் பெய்திடுமாம் தழையும் உரமாய் மாறிடுமாம்.
அடுப்பும் எரிக்க உதவிடுமாம் ஆற்றின் கரையைக் காத்திடுமாம்.
நூதனம் மிக்க மரங்களெல்லாம் நூறு வருடம் வாழ்ந்திடுமாம்.
ஆதலால் வளர்ப்போம் மாந்தரே ஆளுக்கொன்றாய் மரங்களையே!

(1) காயும் கனியும் தருவன எவை?
(2) குளிர்ச்சி எதற்கு கிடைக்கும்?
(3) மரம் நிலத்துக்கு ஆற்றும் பணிகள் எவை?
(4) நூதனம் மிக்க மரங்கள் என்பதால் குறிப்பிடப்படுவது யாது?
(5) நாம் இயற்கையைப் பாதுகாக்கச் செய்யவேண்டியது என்ன? *(10 புள்ளிகள்)*

3.

1. மரங்கள் காயும், கனியும் தருவனவாகும் / காயும், கனியும் தருவன மரங்கள் ஆகும். / மரங்கள் காயும், கனியும் கொடுத்திடுமாம்.
2. கண்ணுக்குக் குளிர்ச்சி கிடைக்கும். / குளிர்ச்சி கண்ணுக்குக் கிடைக்கும். / கண்ணுக்குக் குளிர்ச்சி தந்திடுமாம்.
3. நிலம் நீரைத் தேக்கி வைத்திடும், உறுதியாய்ச் செய்திடும்.
4. நூறு வருடம் வாழ்ந்திடும் / நூறு வருடம் வாழ்ந்திடுமாம்
5. மரங்களை வளர்ப்போம் / மரங்களை வளர்த்திடுவோம்

| | | |
|---|---|---|
| முழுமையான வாக்கியம் | - | 02 புள்ளிகள் |
| வழுக்கள் உள்ள வாக்கியம் | - | 01 புள்ளி |

(2 x 5 = 10 புள்ளிகள்)

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.

පහත දැක්වෙන ඡේදය කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු ලියන්න.

Read the following passage and answer the questions given below in **complete sentences.**

இலங்கை நாடு இயற்கை வளம் மிக்கது. காடுகள், மலைகள், நதிகள் என்பன எமது நாட்டை அழகுபடுத்துகின்றன. இங்கு பீதுருதாலகால மலை உயர்ந்த மலையாகும். மகாவலி கங்கை நீண்ட நதியாகும். நீர் வளம், நில வளம், வன வளம் நிறைந்த எமது நாட்டைப் பார்க்கச் சுற்றுலாப் பயணிகள் பலர் வருகின்றனர். இயற்கை வளங்கள் நிறைந்த எமது நாட்டில் பல்லின மக்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். எமது நாட்டின் அபிவிருத்திக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

(1) எமது நாட்டை அழகுபடுத்துவன எவை?

(2) உயர்ந்த மலை எது?

(3) நீண்ட நதி எது?

(4) சுற்றுலாப் பயணிகள் எதற்காக வருகின்றனர்?

(5) நாட்டின் அபிவிருத்திக்காக நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும்?

*(10 புள்ளிகள்)*

4\. 1. **காடுகள், மலைகள், நதிகள் என்பன நாட்டை அழுகுபடுத்துகின்றன. / எமது நாட்டை அழகுபடுத்துவன காடுகள், மலைகள், நதிகள் என்பனவாகும்.**

2. **உயர்ந்த மலை பீதுருதாலகால மலை ஆகும். / பீதுருதாலகாலமலை உயர்ந்த மலையாகும்.**

3. **நீண்ட நதி மகாவலி கங்கை ஆகும். / மகாவலி கங்கை நீண்ட நதியாகும்.**

4. **சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டைப் பார்க்க வருகின்றனர். / எமது நாட்டைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.**

5. **நாட்டின் அபிவிருத்திக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். / நாம் நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.**

**முழுமையான வாக்கியம்** - 02 புள்ளிகள்

**வழுக்கள் உள்ள வாக்கியம்** - 01 புள்ளி

(2 x 5 = 10 புள்ளிகள்)

## பகுதி III / III කොටස / Part III

- **5, 6** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.
  **5** සහ **6** ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
  Write answers to the questions **5** and **6**.

**5.** சித்திரை விடுமுறையைக் கழிப்பதற்காக கண்டிக்குச் செல்ல எண்ணியுள்ள நீர் அங்கு பார்க்கக்கூடிய இடங்களைப் பற்றி விசாரித்து உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
ඔබ අප්‍රේල් නිවාඩුව සඳහා නුවර ප්‍රදේශයට යාමට අදහස් කරයි. ඔබට නැරඹීමට යාම සඳහා සුදුසු ස්ථාන පිළිබඳව විමසමින් ඔබේ මිතුරකුට ලිපියක් ලියන්න.
You have planned to visit Kandy for your April vacation. Write a letter to your friend asking about the suitable places to visit.

அல்லது

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'மூலிகைச் சவர்க்காரம்' ஒன்றிற்கான விளம்பரம் ஒன்றினைத் தயாரிக்குக.
අළුතින් හඳුන්වා දෙනු ලැබූ 'ශාක සාර සබන්' වර්ගයක් පිළිබඳව වෙළඳ දැන්වීමක් සකස් කරන්න.
Prepare an advertisement about a newly introduced 'herbal soap'

5. **அமைப்பு**

| | | |
|---|---|---|
| முகவரி | - | 01 புள்ளி |
| விளிப்பு | - | 01 புள்ளி |
| முடிப்பும், ஒப்பமும் | - | 01 புள்ளி |

**உள்ளடக்கம்**
- நலம் விசாரித்தல்.
- சித்திரை மாதம் விடுமுறைப் பற்றி குறிப்பிடல்.
- பார்க்க வேண்டிய இடங்களை வினவுதல்.

**மொழிநடை**
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை
- எளிமை

| | | | |
|---|---|---|---|
| அமைப்பு | - | 03 புள்ளிகள் | |
| உள்ளடக்கம் | - | 05 புள்ளிகள் | |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் | 10 புள்ளிகள் |

அல்லது

**மூலிகைச் சவர்க்காரத்திற்கான விளம்பரம்**

**அமைப்பு**
- நுகர்வோரை கவரும் வகை
- சிறியதாகவும் கவர்ச்சியாகவும் இருத்தல்.

**உள்ளடக்கம்**

- நுகர்வோரைக் கவரும் சொற் கையாடல்
- சொற்கள் சிறியதாகவும் விளை திறன் கொண்டதாகவும் இருத்தல்.
- மனதில் பதியும் தன்மையைக் கொண்டிருத்தல்.

**மொழிநடை**

- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை
- எளிமை

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 03 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 05 புள்ளிள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

(10 புள்ளிகள்)

**6.** பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களை **தமிழில்** மொழிபெயர்க்குக.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය **හෝ** ඉංග්‍රීසි වාක්‍ය **දෙමළ** භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil.**

(i) අපේ පාසලේ විදුහල්පතිතුමා ඉතා හොඳ කෙනෙකි.
(ii) මේ ලියුම ලිව්වේ කවුද?
(iii) මම මගේ මාමාගේ ගෙදරට ගියෙමි.
(iv) පොංගල් උත්සවය ජනවාරි මාසයේ දී පැවැත්වේ.
(v) මගේ පුතා කැඳවාගෙන යන්නේ කොහේ ද?

(i) Our School Principal is a very good Person.
(ii) Who wrote this letter?
(iii) I went to my Uncle's house.
(iv) Pongal festival is celebrated in January.
(v) Where are you taking my son?

**அல்லது**

கடன் பெறுதல் தொடர்பாக வங்கி முகாமையாளருக்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கும் இடையே இடம்பெறும் உரையாடல் ஒன்றை **50** சொற்களில் எழுதுக.
ණය මුදලක් ලබා ගැනීම සම්බන්ධයෙන් බැංකු කළමනාකරුවකු හා ගනුදෙනුකරුවකු අතර සිදුවන දෙබසක් වචන **50** ක් පමණ ඇතුළත් වන සේ ලියන්න.
Write a dialogue between a Bank Manager and a Customer regarding obtaining a loan, using about **50** words.

*(10 புள்ளிகள்)*

1. எங்கள் / எங்களது / எமது / பாடசாலையின் அதிபர் மிகவும் / மிக நல்லவர்.
2. இக்கடிதத்தை / இந்த கடிதத்தை / மடலை / அஞ்சலை எழுதியவர் யார்?
3. நான் என்னுடைய / எனது மாமாவின் / மாமனாரின் / வீட்டுக்கு / வீட்டிற்கு / இல்லத்துக்கு / இல்லத்திற்குப் போனேன் / சென்றேன்.
4. பொங்கல் பண்டிகை / கொண்டாட்டம் / விழா தை / ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படும் / நடைபெறும் / இடம்பெறும்.
5. எனது / என்னுடைய மகனை நீங்கள் எங்கே கொண்டு / அழைத்து / கூட்டிக்கொண்டு செல்கிறாய் / செல்கிறீர்கள்.

(2 x 5 =10 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| முழுமையான வாக்கியமாயின் | - | 02 புள்ளி |
| வழுக்கள் உள்ள வாக்கியம் | - | 01 புள்ளி |

**அல்லது**

உரையாடல
**அமைப்பு**
- உரையாடற் பாங்கில் எழுதுதல்.

**உள்ளடக்கம்**
- தலைப்புக்கு பொருத்தமானதாக இருத்தல்.

**மொழிநடை**
- பேச்சு மொழி
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 03 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 05 புள்ளிகள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

(10 புள்ளிகள்)